பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 25 ஞாயிற்றுக்கிழமை 07.04.2024 கதிர் 152

## ஜனாதிபதி வேட்பாளர்கள் அனைவருடனும் பேசுவோம்

### சுமந்திரன் யாழ்ப்பாணத்தில் தெரிவிப்பு

அனைத்துஜனாதிபதி வேட்பாளர்களுடனும் பேச்ச நடத்தப்படும் என்றுஇலங்கைத்தமிழ் அரசுக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ்.ப்பாணத்தில் நடைபெற்ற அநுரகு மாரவுடனான சந்திப்பு தொடர்பில் நேற்றைய தினம் செய்தியாளர்களிடம் பேசியபோதே அவர்இதனைத்தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அநுரகுமாரவின் அழைப்பின் பேரில் அவருடன் பேசினேன். இந்தியாவில் பல இன, மத, மொழி பேசுவோர் ஒன்றாக வாழக்கூடிய முறைமை வெற்றி பெறுவதற்கு அங்கு காணப்படுகின்றமொழி வாரியானமாநிலமுறை மையை அவருக்கு சுட்டிக்காட்டினோம்.

தொடர்ந்தும் அவருடன் பல மட்டங்களில் பேச்சு நடத்த எதிர்பார்த்துள்ளோம். அவருடன் மட்டுமல்ல, அனைத்து ஜனாதிபதி வேட்பாளர்களுடனும் எதிர்வ ☞ 8

## நெருக்கடியான சூழ்நிலையில் நாட்டுக்காக அணி சேர்ந்தவர்

### விஜயதாச ராஜபக்சவுக்கு ரணில் பாராட்டு

அரசியல் ரீதியில் பல்வேறு நெருக்கடியான சூழ்நிலைகளில் விஜயதாச ராஜபக்ச நாட்டுக்காக தன்னுடன் இணைந்தார் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்புமறுசீரமைப்பு அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி விஜயதாச ராஜபக்ஷவின் சட்டத்தரணி வாழ்வின்40ஆவதுஆண்டு நிறைவை முன்னிட்டு ☞ 2

## "விசேடமாக ஒன்றுமில்லை" திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிப்பு

சஜித்தின் ஐக்கிய மக்கள் சக்திக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திரசபையின்ஜி.எல்.பீரிஸ் அணிக்கும் இடையிலான உடன்படிக்கையின்போது தான் உட்பட சிலர் வருகை தராததில் குறிப்பிடும்படியாக எதுவும் இல்லை. அந்த நிகழ்வு அவசரமாக ஏற்பாடு செய்யப்பட்டதால் அந்த நிலமை ஏற்பட்டது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் கூட்டணிஅமைப்புநிகழ்வில் பங்கேற்காமை பெரும் பரபரப்பான அரசியல் செய்திகள் வெளியானமை தொடர்பில் நேற்று செய்தியாளர்களிடம் பேசியபோது தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய மக்கள் சக்தி பீரிஸ் அணியுடன் கூட்டணி அமைக்கும் ☞ 2

## இனி இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக் கட்சியின் புதிய தலைவராக் தெரிந்தெடுக்கப்பட்டவரான சிறீதரன், கட்சி விவகாரம் தொடர்பாக நீண்ட நளைக்குப் பின்னர் நேற்று வாய்திறந்தார்.

அப்போது வெவ்வேறு நபர்களைப் பயன்படுத்தி தன்னையும், கட்சியையும் மலினப்படுத்தும் செயற் பாடுகளை தமது கட்சியைச் சேர்ந்தவர்களே முன்னெடுக்கின்றார்கள் என்று கவலைப்பட்டார்.

கிளிநொச்சியில் செய்தியாளர்களை நேற்றுச் சந்தித்தார் சிறீதரன். அப்போது கட்சி நிலமைகள், வழக்குகள் தொடர்பாகப் பேசினார். நேரடியாகக் குற்றஞ்சாட்டவில்லை என்றாலும் அவரது கருத்துக்கள் யாரையோ மறைமுகமாகக் குற்றஞ் சாட்டினார்.

"நீதிமன்றத்திலிருந்து கட்சியை விரைவாக மீட்க வேண்டும் என்ற அடிப்படையில் தான் மனுதாரர்களின் குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொண்டுநாம்மீள்தெரிவுக்குச் செல்வதாக கடந்த தடவை வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது தெரிவித்திருந்தோம்.

ஆனால், தற்போது அந்த ☞ 2

## புத்தரிசி விழா நேற்று

தேசிய புத்தரிசி விழா நேற்று முற்பகல்ஜனாதிபதிரணில்விக்ரமசிங்க தலைமையில் அனுராதபுரத்தின் வரலாற்றுசிறப்புமிக்கஸ்ரீமஹாபோதிக்கு அருகில் நடைபெற்றது.

பாரம்பரியமாக பெரும் போகத்தில் அறுவடை செய்யப்பட்ட நெல்லின் முதல்பகுதியைஜய ஸ்ரீ மஹாபோதிக்கு காணிக்கையாக செலுத்தும் வருடாந்த புத்தரிசி விழா, அடமஸ்தானாதிபதி வண. பல்லேகம ஹேமரதன தேரரின் ஆலோசனைக்கு அமைவாக விவசாய அமைச்சு மற்றும் கமநல சேவைகள் திணைக்களத்தினால் 57 ஆவது தடவையாகஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

மன்னர் காலத்தில் இருந்து நடைபெற்று வரும் இந்த சம்பிரதாயத்துக்கு நாடு முழுவதிலும் இருந்து ஏராளமான விவசாயிகள் திரண்டு வந்து, 'மழை, விளைநிலங்கள் செழிக்க' வேண்டியும், விவசாயத்தில் நாடுதன்னிறைவு அடைந்து வளமான பொருளாதாரம் ஏற்பட வேண்டியும் பிரார்த்தனை செய்தனர்.

அடமஸ்தானாதிபதிவண. பல்லேகம ஹேமரதன நாயக்க தேரர், தங்கப் பாத்திரத்தில் புத்தரிசியை நிரப்ப ☞ 8

# கடனை திருப்பி செலுத்த 4 வருட கால அவகாசம்

### நாடுகள் இணக்கம் என்கிறார் சாகல

இலங்கை பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கிக் கொண்டதை அடுத்து, அது தனது கடன்களை அடுத்துவரும்4வருடங்களுக்குத் திருப்பிச்செலுத்தாதிருப்பதற்கான சலுகைக்காலத்தைவழங்குவதற்கு கடன் வழங்கிய நாடுகள் இணக்கம் தெரிவித்துள்ளன என்று இலங்கையின்தேசிய பாதுகாப்புத் தொடர்பானஜனாதிபதியின்ஆலோசகர்சாகலரத்நாயக்கதெரிவித்தார்.

இலங்கை கடன்களை மீள செலுத்துவதை 2028ம் ஆண்டு வரை இடைநிறுத்துவது குறித்த இறுதிக் கட்டப் பேச்சுக்களில் இலங்கைக்குகடன்வழங்கிய ☞ 2

## கட்சி அரசியலுக்கேற்ற பொருளாதாரம் இனி அது வேண்டாம் என்கிறார் ரணில்

கட்சியின் தேவைக் கேற்பநாட்டின்பொருளாதாரத்தை உருவாக்கவன்றி பொருளாதார ரீதியாக நாட்டைக் கட்டியெழுப்புவதற் காகவே இந்நாட்டில்அரசியல்கட்சி அமைப்புஉருவாக்கப்பட வேண்டுமெனஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

கட்சிகளின்விருப்பத் திற்கேற்ப நாட்டின் பொருளாதாரத்தை கொண்டு சென்று நாடு பாரிய நெருக்கடிக்கு முகங்கொடுக்க நேரிட்டதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, மீண்டும் அவ்வாறானதொருநிலை ஏற்படாதிருக்கபாரம்பரிய அரசியலில் இருந்து விடுபட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

அனுராதபுரம்மாவட்ட சட்டத்தரணிகளுடன் நேற்று முற்பகல் இடம்பெற்ற சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு மேலும் கருத்துதெரிவித்ததாவது:

இங்கு பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்கள்உள்ளனர். ஐக்கியதேசியக்கட்சியின் தலைவராக நான் இங்கு வரவில்லை. ஜனாதிபதியாக உங்கள் அனைவருக்காகவும் பணியாற்றுகின்றேன். இப்போது நாம் ☞ 2

## ரணில் – சஜித் இணையவேண்டும் மனோ கணேசனின் ஆசை இது

ரணிலும், சஜித்தும் இணைவதை நாம் விரும்புகின்றோம் என்றுதமிழ்முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

தனியார் தொலைக் காட்சி யொன்றுக்கு வழங்கிய செவ்வியின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

ரணிலும், சஜித்தும் இணைந்துகொள்ள வேண்டும் என்று நாம் விரும்புகின்றோம். நானும், ரவூப்பும் தான் முதலில் அதற்கான முயற்சிகளை முன்னெடுத்தோம். ஆனால் அது வெற்றிபெற்றவில்லை.அதுவெற்றிபெற வேண்டும் என்றே நாம் கருதுகின்றோம். இன்னமும் காலம் இருக்கின்றது.

நாம் தற்போது சஜித் பிரேமதாசவின் கூட்டணியில் உள்ளோம். அவருடன் மலையமக்களின்சமூக நீதிக்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள் ☞ 2

## சு.க. உறுப்பினர்கள் நேற்று கட்சியின் முன் போராட்டம்

சுதந்திரகட்சியின் அமைப்பாளர்கள்கூட்டம் நேற்று நடைபெறவுள்ளதாக அக்கட்சியின் பதில் பொதுச்செயலாளர் துஷ்மந்த மித்ரபால விடுத்த அறிவிப்பை அடுத்துகட்சியின்அமைப்பார்கள் பலர் கட்சியின் தலைமையகத்திற்கு முன்னால் ஒன்றுகூடினர்கள். எனினும் அவர் களைப் பொலிஸார் உள்ளே அனுமதிக்காததைஅடுத்துஅவர்கள் எதிர்ப்புப் பேரணியில் ஈடுபட்டனர்.

இதன்போது முன்னாள் செயலாளர் தயாசிறி ஜயசேகரவும் பிரசன்னமாகியிருந்தார். எனினும் பொலிஸார் தமக்கு அளிக்கப்பட்ட முறைப்பாட்டின் காரணமாக யாரையும் அலுவலகத்திற்குள் செல்வதற்கு அனுமதிஅளிக்கமுடியாது என்று கூறினார்கள்.

இதனால் சினமடைந்த அமைப்பாளர்கள் கோசங்களை எழுப்பியவாறு கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். விசேடமாக சந்திரிகாவைதலைவராக ஏற்றுக்கொள்ள முடியாது என்று கோசங்களை ☞ 2

## அலைபேசி விலைகள் குறைகின்றன

அலைபேசிகளின் (மொபைல்)விலைகளை 18% குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை தொலைபேசி இறக்குமதி மற்றும்விற்பனையாளர் சங்கத்தின்தலைவர்சமித் செனரத்தெரிவித்துள்ளார்.

அவர் இதுதொடர்பில் மேலும்தெரிவித்ததாவது:

டொலர் விலை குறைவடைவதைத் தொடர்ந்து அலைபேசிகளின் விலைகளை திருத்துவதற்கான ☞ 2

## அமெ. தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சாகலவுடன் தொலைபேசியில் பேச்சு

அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர்ஜேக்சலிவன் பிராந்திய பாதுகாப்பு குறித்து இலங்கையுடன் பேச்சு நடத்தியுள்ளார்.

இலங்கையின்தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சாகலரத்நாயக்கவை ஜேக் சலிவன் தொலைபேசி ஊடாக தொடர்புகொண்டு பேசினார் எனவெள்ளைமாளிகை தெரிவித்துள்ளது.

இலங்கையின் ☞ 2

## 2048இல் வளமான இலங்கைக்கான பயணம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாம்

நவீன விவசாயம், சுற்றுலா மற்றும் வலுசக்தித் துறைகளில் பரிவர்த்தனைரீதியிலான மாற்றத்துடன் 2048 ஆம் ஆண்டளவில் வளமானஇலங்கையை கட்டியெழுப்பும் பயணத்தை ஆளும் தரப்பு தற்போது ஆரம்பித்துள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

'என்னில் இருந்து ஆரம்பிப்போம்' எனும் தலைப்பில் நேற்று பிற்பகல் அனுராதபுரம் மாவட்ட இளைஞர் ☞ 8

## சு.க. தலைமையகத்தினுள் நுழையத் தற்காலிகத் தடை

சிறி லங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்திற்குள் சிலஆவணகோப்புக்கள் காணாமல்போயுள்ளதால் கொழும்புடார்லிவீதியில் அமைந்துள்ளசிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்திற்குள் எவரும்நுழைவதற்குத் தற்காலிக தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் ☞ 2

## இனி இது .....

நிலைமைகள் அனைத்தும் மாறியுள்ளன. கட்சிக்கு எதிரான வழக்குகள் அண்மித்த காலத்தில் நிறைவுக்குவரும்என்றுஎதிர்பார்க்க முடியாத நிலைமைகளே உள்ளன.

புதியபுதியஇடையீட்டுமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இன்னும் எத்தனை இடையீட்டு மனுக்கள் தாக்கல் செய்யப்படும் என்று தெரியாத நிலைமைகள் உள்ளன.

கட்சியில் உள்ள ஒரு சிலரின் செயற்பாடுகள் காரணமாகவே இந்த நிலைமைகள் ஏற்பட்டுள்ளன. கட்சிக்குஇவ்விதமானநிலைமைகள் ஏற்பட்டுள்ளதையிட்டு நான் ஆதங்கத்துடனும், கவலையுடனும் தான் மேற்படி விடயங்களை பொதுவெளியில் தெரிவிக்க வேண்டியுள்ளது.

சிறிதரனாகிய என்னையும், கட்சியையும்மலினப்படுத்துவதாகக் கருத்திக்கொண்டு சில நபர்கள் வெவ்வேறு நபர்கள் ஊடாக வழக்குகளைத் தாக்கல் செய்கிறார்கள்" ஷ்-- என்றார் அவர்.

அவரது சட்டத்தரணி வெள்ளிக்கிழமை திருகோணமலையில் தெரிவித்த கருத்துக்களை ஒத்தததாகவே இதுவும் அமைந்திருந்தது. அவரது சட்டத்தரணி, எதிர்பார்த்ததுதான் நடந்தது என்றார். இவரோ கட்சியில் உள்ள சிலர் வெவ்வேறு நபர்கள் மூலம் தனக்கெதிராகவும் கட்சிக்கு எராகவும் வழக்குகள் தாக்கல் செய்யப்படுகின்றன என்கிறார்.

சிறீதரனின் கருத்துக்கள் யாரையோ குறிப்பிட்டுச் சாடுவதைப்போன்றுஇருந்தாலும்அதனை வெளிப்படையாகச்செல்லும்துணிபு அவருக்கு இருக்கவில்லை. அது வரும்போது கட்சி அவர் வசப்படும் என்று எதிர்பார்க்கலாம் போலும்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## கடனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடுகள் ஈடுபட்டதாகவும் அது முடிவடைந்து அடுத்த சில வாரங்களில் முழுமையான அறிவிப்பு வெளியாகும் எனவும் இலங்கையின் தேசிய பாதுகாப்பு விடயங்களிற்கான ஆலோசகர் சாகல ரத்நாயக்க தெரிவித்தார் என 'நிக்கேய் ஏசியா' என்ற ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையில் சீனாவின் செல்வாக்கு அதிகரிப்பதை தடுப்பதற்காக ஜப்பான் உட்பட நாடுகள் முயற்சிகளை மேற்கொண்டுள்ள நிலையிலேயே இந்த பேச்சுவார்த்தைகள் இடம்பெறுவதாகவும் நிக்கேய் ஏசியா தெரிவித்துள்ளது.

இலங்கை தனது கடன்களை அ-டுத்த 15 வருடங்களிற்குள் முழுமையாக மீளச்செலுத்தவேண்டியிருக்கும். 2028 முதல் 2043 வரையான காலப் பகுதிக்குள் அதனைச்செலுத்திமுடிக்கவேண்டும் எனத் தெரிவித்துள்ள சாகல இலங்கை வேண்டுகோள் விடுத்துள்ள போதிலும் கடன் தொகை குறைக்கப்படவில்லை எனவும் தெரிவித்தார்.

இலங்கை 2022 ஏப்பிரலில் வெளிநாட்டு கடன்களை மீள செலுத்துவதை தற்காலிகமாக இடைநிறுத்துனவதாக அறிவித்திருந்தது. இதன் மூலம் இலங்கை தன்னை வங்குரோத்து நிலைக்குஉட்படுத்தியது.

2023 ஏப்பிரலில் கூட்டத்தில் இலங்கைக்கு கடன்வழங்கும் நாடுகள் குழு ஏற்படுத்தப்பட்டது சீனாவிற்கு பின்னர் இலங்கைக்கு அதிகளவு கடன்களை வழங்கிய நாடான ஜப்பான் மற்றும் இந்தியா பிரான்ஸ் ஆகிய நாடுகள் இந்தக் குழுவில் இடம்பெற்றுள்ளன.

இந்த நாடுகளுக்கு இடையிலேயே இலங்கை கடன்களை மீள செலுத்துவதைஇடைநிறுத்திவைப்பது தொடர்பிலும்வட்டியைசெலுத்துவது தொடர்பிலும் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது

சீனா இந்த கூட்டத்தில் பார்வையாளராக மாத்திரம் கலந்து கொண்டது. எனினும்சீனாவுடனான கடன்மறுசீரமைப்பு நாடுகள் ஏனைய நாடுகளுடனான கடன்மறுசீரமைப்பை ஒத்ததாகவே காணப்படும் என தெரிவித்துள்ள இலங்கையின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அனைவரும் சமமாக நடத்தப்படுவார்கள்எனவும்தெரிவித்துள்ளார்.

2023ஆம்ஆண்டின்இறுதியில் இலங்கை செலுத்தவேண்டிய வெளிநாட்டு கடன் 37.3 பில்லியன் டொலராக காணப்பட்டது இதில் சீனாவிற்கு 4.7 பில்லியன் டொலர்களை செலுத்தவேண்டும். 2017 இல் இலங்கை தனது தென் பகுதி அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவிற்கு வழங்கியது .

இது கடன்களை வழங்குவது தாமதமானால் உட்கட்டமைப்பு திட்டங்களை கைப்பற்றும் கடன்பொறிக்கான உதாரணமாக கருதப்பட்டது.

இலங்கையைத் தளமாக கொண்டு இந்தோ பசுபிக்கில் சீனா அகலக்கால்பதிப்பது குறித்துஇந்தியா ஜப்பான் உட்பட இலங்கைக்கு கடன்வழங்கியநாடுகள்சிலகவலை கொண்டுள்ளன.

எனினும் அம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பான உடன்படிக்கை முற்றிலும் வர்த்தக நோக்கங்களை கொண்டது என தெரிவித்த சாகலரத்நாயக்க இதில் இராணுவ நோக்கம் எதுவுமில்லை இலங்கைவெளிநாட்டுமுதலீட்டுக்கு தயாராக உள்ளது நாங்கள் எந்த நாடு என்ற அடிப்படையில் முதலீட்டாளர்களை தெரிவு செய்வதில்லைதேசியபாதுகாப்பிற்கு பாதுகாப்பு ஏற்படுத்தினால் மாத்திரம் அது குறித்து கரிசனை கொள்வோம் என தெரிவித்துள்ளார். எனினும் இந்தியாவின்பாதுகாப்பிற்குஆபத்தை ஏற்படுதக்கூடிய நாட்டின் வடபகுதி குறித்து நாங்கள் கவனத்துடன் இருக்கின்றோம் எனவும் அவர் தெரிவித்தார்.

## சு.க....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பக்கட்ட விசாரணைகள் முடியும் வரை சுதந்திரக் கட்சியின் தலைமையகத்துக்குள் செல்வது தடைசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் சில ஆவணகோப்புகள் காணாமல் போயுள்ளதாக கட்சியின் பதில் பொதுச் செயலாளர் துஷ்மந்த மித்ரபால நேற்று முன்தினம் மருதானை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

இது தொடர்பில் மருதானை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் இதன் காரணமாக நேற்று பிற்பகல் வரை சுதந்திரக் கட்சியின் தலைமையகத்திற்குள் நுழையத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், சம்பவத்துடன் தொடர்பில்லாத சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தின் கேட்போர் கூடத்துக்குள் நுழையவிடாமல் உறுப்பினர்களைப் பொலிஸார் தடுத்துள்ளதாகவும் பதில் பொதுச் செயலாளர் குற்றஞ்சாட்டினார்.

## நெருக்கடியான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கனிஷ்ட சட்டத்தரணிகளால் கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் நேற்று முன்தினம் பாராட்டு நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இலங்கை அரசியலிலும் சட்டத்துறையிலும் தனித்துவமான பங்களிப்பை வழங்கும் விஜயதாச ராஜபக்ச, இலக்கியவாதி, எழுத்தாளர், பாடலாசிரியர் மற்றும் கலைஞராக ஆற்றியபணிகளுக்காகஇதன்போது ஜனாதிபதியினால் பாராட்டப்பட்டார்.

இந்தநிகழ்வில்பிரதமஅதிதியாக கலந்து கொண்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

1977ஆம்ஆண்டுநாடாளுமன்ற உறுப்பினராகநாடாளுமன்றத்திற்கு பிரவேசித்த போது விஜயதாச ராஜபக்சவை சந்திக்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. அவர் அப்போது ஐக்கிய தேசியக் கட்சியின் திறமையான வேட்பாளராக இருந்தார்.

நீதியமைச்சர் என்ற வகையில் தற்போது அவர் பல சட்டமூலங்களைநாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார். அவரின் எதிர்கால தொழில் பணிகளுக்கு வாழ்த்துக்களைத்தெரிவிக்கின்றேன் என்றார்.

இதேவேளை, தனது 40 வருட சட்டத்தரணிப் பயணத்தை நினைவுகூர்ந்து இங்கு உரையாற்றிய அமைச்சர் விஜயதாச ராஜபகச, ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தமக்கு உறுதுணையாக இருந்த அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதோடு, இவ்வாறானதொருநிகழ்வை ஏற்பாடு செய்ததற்காக தனது கனிஷ்ட சட்டத்தரணிகள் உட்பட சட்டத்துறையினருக்கும் தனது நன்றிகளைத் தெரிவித்தார்.

40 வருடங்கள் கொழும்பு நீதித்துறை வளாகத்தில் சட்டத்தரணியாகவும், ஜனாதிபதி சட்டத்தரணியாகவும்அவர்பணியாற்றியுள்ளதுடன், சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவராகவும் ஒரு அரசியல்வாதியாக பாராளுமன்ற உறுப்பினராகவும்கோப்குழுத்தலைவராகவும்பல்வேறுஅரசாங்கங்களின் கீழ் பல அமைச்சுகளில் அமைச்சரவை அமைச்சராகவும் பணியாற்றியுள்ளார்.

அமைச்சர்கள், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம்பிரதானியுமானசாகல ரத்நாயக்க, சட்டமா அதிபர் சஞ்சய ராஜரத்தினம், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், இராஜதந்திரிகள் உள்ளிட்டோர் பங்கேற்றிருந்தனர்.

## சு.க. உறுப்பி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எழுப்பினார்கள்.

இச்சமயத்தில் மைத்திரிபால சிறிசேன, தனது வாகனத்தில் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு கையசைத்தவாறு அவ்வழியால் சென்றிருந்தார்.

ஆதனைத்தொடர்ந்து மைத்திரபால சிறிசேனவின் புதல்வர் தஹாம் சிறிசேனவும் அப்பகுதியில் பிரசன்னமாகியிருந்தார். இதனையடுத்து அப்பகுதிக்கு பதில் பொதுச் செயலாளர் துஷ்மந்த மித்ரபாலவும் வருகை தந்தார்.

அவர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையில், அரசாங்கத்தில் அமைச்சுப்பதவிகளைப்பெற்றவர்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை அழிவுப்பாதைக்கு கொண்டு செல்வதற்கு முயற்சிக்கின்றார்கள். அவர்களின் செயற்பாடுகளுக்கு இடமளித்து கட்சியை அழிவுப்பாதைக்குச் செல்வதை அனுமதிக்க முடியாது. அதற்கு நான் ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை.

நாம்பொலிஸிடத்தில்ஆவணங்கள் காணாமல்போயுள் என என்று முறைப்பாட்டைச் செய்தபின்னர் தான் சிலர் இங்கு வந்து ஊடகவியலாளர் சந்திப்புக்களைச் செய்தனர். அதன்போது பொலிஸார் உறங்கிக் கொண்டு இருந்தார்களா? நாம் இப்போது கூட்டத்தினை நடத்துவதற்கு முனைகின்றபோது தான் அமைச்சுப்பதவிகளில் உள்ளவர்கள் பொலிஸாரின் மீது அழுத்தங்களைப் பிரயோகித்து அனைத்து தடைகளையும் மேற்கொள்கின்றார்கள். எவ்வாறான சூழ்ச்சிகளை மேற்கொண்டாலும் ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சியைவீழ்த்த முடியாது. அதனை மீட்டெடுப்போம் என்றார்.

## அமெ. தேசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பு மற்றும் இறைமைக்கான அமெரிக்காவின் ஆதரவு, சர்வதேச நாணயநிதியத்தின் திட்டங்களை பூர்த்தி செய்தல், எதிர்கால ஒத்துழைப்பிற்கான வாய்ப்புகள் எனபன குறித்து இந்தப் பேச்சின்போது ஆராயப்பட்டது என வெள்ளை மாளிகை தெரிவித்தது.

பிராந்தியத்தில் சமாதானம் மற்றும் பாதுகாப்பு விடயங்களில் ஒத்துழைப்பதற்காகஇலங்கையுடன் தொடர்ச்சியான ஈடுபாட்டைப் பேணுவது குறித்து அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் தனது ஆர்வத்தை வெளியிட்டுள்ளார்.

## ரணில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளோம். ஏனைய தலைவர்களிடத்திலும் அந்த ஒப்பந்தத்துக்கான இணக்கப்பாட்டை ஏற்படுத்தவுள்ளோம்.

குறிப்பாக, அநுர, ரணில் போன்றவர்களும் அந்த ஒப்பந்தத்தினை ஏற்றுக்கொள்ளச் செய்யவுள்ளோம். எதிர்காலத்தில் சஜித் தலைமையில் ஆட்சி வந்தாலோ அல்லது பிறிதொருவர் தலைமையில் ஆட்சி ஏற்பட்டாலோ மலையக மக்கள் விடயத்தில் அவர்கள் நிராகரிப்புக்களைச் செய்யக் கூடாதல்லவா? என்றார்.

## அலைபேசி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

சுமார் 10,000-இற்கு விற்பனை செய்யப்பட்ட கையடக்க தொலைபேசிகள் 7,000-ற்கு விற்பனை செய்யப்படவுள்ளன. அதேபோன்று புதிதாக இறக்குமதி செய்யப்படும் கையடக்கத் தொலைபேசிகளின் விலைகளிலும் வெகுவான மாற்றங்கள் ஏற்படவுள்ளன என்றார்.

## கட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாரம்பரியமாக நினைத்த காலம் முடிந்துவிட்டது. பாரம்பரிய அரசியலின் காரணமாகவே இந்த இக்கட்டான சூழலை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அதிலிருந்து நாம் வெளியேற வேண்டும்.

நாட்டின் தேவைக்கேற்ப கட்சி அமைப்பை மாற்றி அமைக்க வேண்டும். கட்சி அமைப்பின் விருப்பப்படி நாட்டை கட்டியெழுப்ப முடியாது. அதைச் செய்யப் போனதால்தான் கடந்த காலங்களில் பல சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அதனை யாரும் பொறுப்பேற்கவில்லை. கடைசிவரையாரும்ஆட்சிஅமைக்க முன்வரவில்லை.

இது குறித்து முக்கிய கட்சிகள் ஒன்று கூடி கலந்துரையாடுவது நல்லது என்று நான் நம்புகிறேன். பழைய கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகியவற்றின் அடிப்படையில் கிராமங்கள் கட்டியெழுப்பப்பட்டன. ஆனால் தற்போது பல புதிய கட்சிகள் உருவாகியுள்ளன. அடுத்த தேர்தலில் இதெல்லாம் மாறலாம். கட்சிகளைப் பற்றி சிந்திக்காமல் நாட்டைப் பற்றி சிந்திக்க வேண்டும். இல்லையேல் பிரிவுதான் ஏற்படும்.

மிகவும் மோசமான கால கட்டத்தை கடந்து வந்துள்ளோம். எங்கள் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் வீதியில் அடித்துக் கொல்லப்பட்டார். அந்த நிலைக்கு நாம் திரும்ப வேண்டுமா என்று எல்லோரிடமும் கேட்க விரும்புகிறேன்.

இதற்கு சில அரசியல்வாதிகளும் அங்கீகாரம் அளித்துள்ளனர். மனித உரிமைக்காக நிற்கும் சட்டத்தரணிகள்சங்கம்கூட இதைக்கண்டிக்க நடவடிக்கை எடுக்கவில்லை.

ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் அன்று கொல்லப்பட்டார். இந்த நாட்டில் ஜனநாயகம் எங்கிருந்தது என்பதை இன்று நாம் மறந்துவிட்டோம். பாராளுமன்றத்தில் பெரும்பான்மை உள்ளவர் பிரதமராக வேண்டும். இல்லையெனில், வேறு யாராவது பிரதமராகலாம்.

பிரதமரின் வீட்டை எரித்துவிட்டு வெளியேறச் சொன்னால், எதிர்க் கட்சிகள் பிரதமரை இராஜினாமா செய்யச் சொன்னால், நாட்டில் ஜனநாயகம் இருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன். இங்கிலாந்து போன்ற நாட்டில் இது நடந்தால் என்ன நடக்கும், எனவே இப்போது நாட்டில்ஜனநாயகத்தைவலுப்படுத்த வேண்டும்.

அதன்படி, ஒருகட்சியாருக்காவது பிரச்சினை ஏற்பட்டால், அதைக் கண்டிக்க வேண்டும். எதிரணியில் இருந்த குமார வெல்கமவையும் காருக்குள் ஏற்றி, சிலர் தீவைக்க முயன்றபோது அங்கிருந்தவர்கள் அவரைக் காப்பாற்றினார்கள். அவர் திருடனும் அல்ல கொலைகாரரும் அல்ல.

எனவே, நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட வேண்டும். அதன்போது நாம் அனைவரும் இணைந்து பணியாற்ற வேண்டும். திருடர்களை தண்டிப்போம் என சில தரப்பினர் கூறுகின்றனர். நாங்கள் திருட்டுக்கு எதிரானவர்கள். ஆனால் கட்சிகளுக்குஅவர்களைதண்டிக்க முடியாது.

திருடர்களை கண்டுபிடித்து நீதிமன்றத்தில் நிறுத்துவோம் என்று கூறுவது சரிதான். மேலும், ஒன்லைன் சட்டமூலம் கொண்டு வரும்போதுஜனநாயகம்பறிபோகும் என்றும் கூறப்படுகிறது. எனவே, இந்தபழைய அரசியலை விட்டுவிட வேண்டும்.

நாம் அனைவரும் புதிதாக சிந்திக்க வேண்டும். கடந்த காலத்தில் நாட்டின் ஜனநாயகம் ஆட்டம் கண்டது. எனவே, நாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டஜனநாயகத்தை சரியானபாதையில்கொண்டுசென்று நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல உங்கள் அனைவரையும் அழைக்கின்றேன்.

சட்டத்தரணிகள் கேட்ட சில கேள்விகளும் அதற்கு ஜனாதிபதி அளித்த பதில்களும் வருமாறு:

கேள்வி: அனுராதபுரத்தை சுற்றுலாப் பிரதேசமாக அபிவிருத்தி செய்வதற்கு முறையான வேலைத் திட்டம் தயாரிக்கப்பட்டால் அது அனுராதபுரத்தை விஸ்தரிப்பதற்கு நல்லதொரு சந்தர்ப்பமாக அமையும் என நான் பரிந்துரைக்க விரும்புகின்றேன்.

பதில்: காணி தொடர்பாக பல பிரச்சினைகள் எழுந்துள்ளன. எனவே, அரச காணிகள் தொடர்பில் அதன் உரிமையை ஒரே நிறுவனத்தின் கீழ் கொண்டு வர நடவடிக்கை எடுத்து வருகிறோம். இதன்படி, முறையான திட்டத்தின் கீழ் இந்த மாகாணத்தை அபிவிருத்தி செய்ய எதிர்பார்க்கப்படுகிறது. பல முக்கிய சுற்றுலா ஹோட்டல்கள் இங்கு முதலீடு செய்ய விருப்பம் தெரிவித்துள்ளன. அவர்களுக்கும் வாய்ப்பளிக்க வேண்டும். இதன்படி அனுராதபுரம் நகரம் முறையான திட்டத்தின்படி சுற்றுலாப்பிரதேசமாக அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றது.

கேள்வி: நாடு பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இவ்வேளையில், அரச நிறுவனங்களில் விரயத்தை குறைப்பதுடன், வருமானத்தை ஈட்டுவதும் அவசியமாகும். மில்லியன்கணக்கில்நட்டமடைந்து வரும் அரச திணைக்களங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்கள் செய்யும் கொள்வனவு மற்றும் கொள்முதல் ஏற்பாடுகளில் புதிய விதிகள் கொண்டுவரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

பதில்: அரச நிறுவனங்களில் இடம்பெறும் வீன்விரயத்தை ஒழிக்கும் திட்டத்தை ஏற்கனவே தொடங்கியுள்ளோம். இதுபற்றி விசாரித்து அறிக்கை அளிக்க பல பாராளுமன்றக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. மேலும், நிபுணத்துவ அறிவைப் பெற்று அரச திணைக்களங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களின் எண்ணிக்கையைக் குறைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

சில விடயங்களுக்கு பல திணைக்களங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்கள் உள்ளன. எனவே, ஒட்டுமொத்த அரச கட்டமைப்பையும்மாற்றவேண்டும். அத்துடன், எதிர்காலத்தில் மாகாண சபைகளுக்கு பரந்தளவிலான பணிகளைகையளிக்கும்வகையில் செயற்பட்டு வருகின்றோம்.

நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு நாம் முன்னுரிமை கொடுக்க வேண்டும். எனவே, அடுத்த சில ஆண்டுகளில் இத்திட்டத்தை செயல்படுத்த திட்டமிட்டுள்ளோம்.

இந்த செயலில் உள்ள திட்டங்களில் உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் இணைந்து பணியாற்றி வருகிறோம். இங்கிலாந்தும் இந்த நிலையை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. 1979 க்குப் பிறகு, ஒரு பாரிய மறுசீரமைப்பு ஏற்பட்டது என்றார்.

காலைக்கதிர்
ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

காலைக்கதிர் Kalaikkathir

# திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டம்





(ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் வெள்ளிக்கிழமை ஒருங்கிணைப்புக்குழுவின் இணைத்தலைவர்களான கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அத்துக்கோரள மற்றும் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம். அதாவுல்லா ஆகியோர்களின் இணைத் தலைமையில் மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சியின் வரவேற்புரையை தொடர்ந்து மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் ஆரம்பமானது.

கடந்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் முன்னேற்றங்கள் தொடர்பாகவும், முன்வைக்கப்பட்ட ஆலோசனைகள் தொடர்பாகவும் இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டன.

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள கண்டல் தாவரங்களைப் பாதுகாக்கும் செயற்திட்டம், சட்டவிரோதமாக காணி பிடிப்பவர்களிடமிருந்து அரச காணிகளை பாதுகாப்பதற்கான செயற்திட்டத்தை உருவாக்குதல், மூதூர் பிரதேச செயலக பிரிவின் நல்லூர் கிராம அலுவலர் பிரிவிலுள்ள ஆதிவாசி மக்களின் காணிப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணுதல், மான்கள் வீதி விபத்தில் சிக்குவதனை தடுப்பதற்காக திருகோணமலை சாங்கமித்தா யாத்திரீகர் மண்டப வீதியில் வேகத் தடைகளை அமைத்தல், கிண்ணியா பிரதேச செயலக பிரிவிலுள்ள காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு உரிய காணிகளில் நீண்டகாலமாக வசிக்கும் மக்களுக்கு விரைவாக காணி உறுதிகளை வழங்குதல், சுற்றுலா தொழிற்துறையை மேம்படுத்துவதற்காக கிண்ணியா பிரதேசத்தில் உப்பாறு கடற்கரையை அழகுபடுத்துதல் போன்ற விடயங்கள் ஆராயப்பட்டன.

மேலும் கந்தளாய் மீஹஸ்வெள வாய்கால் அமைப்பதற்காக வன பாதுகாவல் திணைக்களத்தின் விதந்துரையைப் பெறுதல், இலுப்பைக்குளத்தில் திருகோணமலை பொது மருத்துவமனை நிர்மாணம் வேலைகளின் முன்னேற்றத்தை ஆராய்தல், திருகோணமலை உயர் பெண்கள் கல்லூரியின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ள நுழைவு பாதையை சீராக்குதல், கிண்ணியா பிரதேச சபை பிரதேசத்தில் நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை அலுவலகத்தை மீள நிறுவுதல், கிண்ணியா தள வைத்தியசாலையைப் புதிதாக ஒதுக்கப்பட்ட காணிக்கு கொண்டு செல்லுதல் போன்ற பல விடயங்கள் இதன்போது ஆராயப்பட்டன.

இதன்போது கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ்.ரத்நாயக்க, கிழக்கு மாகாண முன்னாள் மாகாண அமைச்சர் ஆரியவதி கலப்பத்தி, கிழக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், மேலதிக அரசாங்க அதிபர்கள், மாவட்ட செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள் அரச உயரதிகாரிகள் மற்றும் முப்படைகளின் உயரதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (05)

# புத்தளத்தில் வீட்டு வளவினுள் உட்புகுந்த இராட்சத முதலை





புத்தளம் பகுதியில் இராட்சத முதலையொன்று பிடிக்கப்பட்டு கல்வில சூழலியல் பூங்காவில் விடுவிக்கப்பட்டது.

புத்தளம் , தேவனுவர பகுதியில் வெள்ளிக்கிழமை அதிகாலை இராட்சத முதலையொன்று தனியார் ஒருவரின் வீட்டு வளவினுள் உற்புகுந்துள்ளது. இதனை அவதானித்த அப்பகுதி மக்கள் கருவலகஸ்வெள வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்குத் தகவல் வழங்கியுள்ளனர்.

இதனையடுத்து குறித்த பகுதிக்கு விரைந்த வனஜீவரசிகள் திணைக்கள அதிகாரிகள் கடும் பிரயத்தணத்திற்கு மத்தியில் இந்த முதலையைப் பிடித்து கல்வில சூழலியல் பூங்காவில் விடுவித்துள்ளனர்.

குறித்த முதலை சுமார் 9 அடி நீளமுடையது எனவும் சுமார் 150 கிலோ கிராம் எடைகொண்டு காணப்படுவதாகவும் கருவலகஸ்வெள வனஜீவராசிகள் திணைக்களத்தினர் இதன்போது தெரிவித்தனர். (05)

# மாந்தை மேற்கு பிரதேச அபிவிருத்திக் கூட்டம்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

இவ் ஆண்டிற்கான இரண்டாவது பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மன்னார் மாவடடத்தின் மாந்தை மேற்கு பிரதேசச் செயலாளர் அரவிந்தனின் நெறிப்படுத்துதலில் கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தானின் தலைமையில் மாந்தை மேற்கு பிரதேசச் செயலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

குறித்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பிரதேச செயலக ரீதியில் மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு விடயங்கள் உட்பட கல்வி, சுகாதாரம், காணி போன்ற விடயங்கள் பற்றி விரிவாக ஆராயப்பட்டது.

இப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில்

திணைக்கள தலைவர்கள், அரச பதவிநிலை உத்தியோகத்தர்கள், பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலரும் குறித்த நிகழ்வில் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# கெஹலியவும் சுகாதார அதிகாரிகளும் ரூபாய் 10 கோடி இழப்பீடு தரவேண்டும்

## கண்மருந்தால் பார்வைபாதிக்கப்பட்ட நோயாளி கோரிக்கை

*அரசாங்க மருத்துவமனையில் கண்புரை அறுவைசிசிச்சைக்கு பயன்படுத்தப்பட்ட மருந்து காரணமாக கண்பார்வையை இழந்த நோயாளியொருவர் முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மற்றும் சுகாதார அமைச்சின் அதிகாரிகளிடமிருந்து 100 மில்லியன் நஷ்டஈட்டை கோரியுள்ளார்.*

*கந்தபொலவை சேர்ந்த மகரி ராஜரட்ணம் என்ற நபர் சட்டநிறுவனம் ஊடாக நஷ்டஈட்டை கோரியுள்ளார்.*

*முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தேசிய மருந்துகட்டுப்பாட்டு அதிகார சபையின் அதிகாரிகள் சுகாதார அமைச்சின் அதிகாரிகள் தனக்கு ஏற்பட்ட பாதிப்பிற்காக நஸ்டஈட்டை வழங்கவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ள ராஜரட்ணம் இழப்பீடு வழங்கப்படாவிட்டால் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரித்துள்ளார்.*

*இன்விக்டஸ் என்ற சட்டநிறுவனத்தின் ஊடாகவே அவர் தனது நஷ்டஈட்டு கோரிக்கையை முன்வைத்துள்ளார்.*

*2023ம் ஆண்டு மே மாதம் ஐந்தாம் திகதி தனது கட்சிக்காரர் நுவரேலியா மருத்துவமனையில் கண்சத்திரசிகிச்சை செய்துகொண்டார் ஆறாம் திகதி அவர் மருத்துவமனையிலிருந்து வெளியேறினார் மருத்துவமனையில் ப்ரெட்னிசோலோன் அசிடேட்என்ற மருந்தினை பயன்படுத்துமாறு ஆலோசனை வழங்கினார்கள் என தெரிவித்துள்ளது.*

*எனினும் குறிப்பிட்ட கண் மருந்தினை பயன்படுத்தியதை தொடர்ந்து தனது கட்சிக்காரர் தலைவலி உட்பட பல பாதிப்புகளை எதிர்கொண்டனர் என சட்டநிறுவனம் தெரிவித்துள்ளது.*

*இதனை தொடர்ந்து மருத்துவபரிசோதனைகள் இடம்பெற்றன எனது கட்சிக்காரர் பத்தாம் திகதி மீண்டும் தேசிய கண்மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் அங்கு இடம்பெற்ற மருத்துவபரிசோதனைகள் மூலம் குறிப்பிட்ட கண்மருந்து காரணமாக அவர் தனது கண்பார்வையை இழந்துகொண்டிருப்பது தெரியவந்தது எனவும் குறிப்பிட்டுள்ளது.*

*அந்த கண்மருந்துகள் தரமற்றவை அந்த மருந்தினை பயன்படுத்தியவர்கள் எண்டோபனைட்டிஸ் நோய் பாதிப்பிற்குள்ளானார்கள் எனவும் அந்த சட்டநிறுவனம் தெரிவித்துள்ளது. (05)*

காலைக்கதிர்
Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஆரோக்கியமே முக்கியம்

இன்று உலக சுகாதார தினம். சமீப காலமாக, அதிலும் குறிப்பாக கொரோனா பெருந்தொற்றுக்கு பிறகு ஆரோக்கியம் என்பதுதான் உண்மையான மற்றும் மிகப்பெரிய செல்வம் என்பதை நாம் உணர்ந்திருக்கிறோம். ஆரோக்கியமான உடல் மற்றும் மனம் இரண்டுமே நம்மை உற்சாகமாக மற்றும் மகிழ்ச்சியாக வைத்திருக்கும்.

'ஆரோக்கியமே செல்வம்' என்பது நமக்கு தெரிந்திருந்தாலும் நமது வாழ்க்கை முறை காரணமாக உடல், உள ஆரோக்கியத்தைப் புறக்கணிக்கிறோம். ஆரோக்கியமே மிகப்பெரிய சொத்து என்பதை மக்களுக்கு நினைவூட்ட ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 7 உலக சுகாதார தினம் (நிலிஷுமி– ஃஹிளழியிமிஜு ம்ழிதீ) கடைபிடிக்கப்படுகிறது. உடல் மற்றும் மன ஆரோக்கியம் பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்துவதே இந்த நாளின் முக்கியத்துவம்.

உலக சுகாதார அமைப்பின் ஆண்டு நிறைவை குறிக்கும் வகையில் ஏப்ரல் 7ம் தேதி உலக சுகாதார தினம் கொண்டாடப்படுகிறது. இந்தாண்டு சுகாதார தினத்தின் கருப்பொருள் "என் உடல்நலம், என் உரிமை" (னிதீ ஜுளழியிமிஜு ஷ்வினிதீஷுஆஜுமி) என்பதாகும். ஒவ்வொரு ஆண்டும் இப்படி ஒரு குறிப்பிட்ட பொது சுகாதாரத்தில் அக்கறை செலுத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில் இந்தாண்டு கருப்பொருளான உடல் நலத்துக்கான மக்களின் உரிமை பற்றிப் பேசுகின்றது.

உலக மக்களின் சுகாதார நலன்களை மேம்படுத்தும் நோக்கத்துடன் ஐக்கிய நாடுகள் சபையின் ஒரு பிரிவான உலக சுகாதார அமைப்பு 1948இல் அமைக்கப்பட்டது. இந்த அமைப்பு அனைத்து உலக பொது சுகாதாரத்திற்கான ஒருங்கிணைப்பு பணியை செய்யும் அதிகாரம் படைத்தது. 1950 முதல் ஏப்ரல் 7 உலக சுகாதார தினமாகக் கொண்டாடப்படவேண்டும் உலக சுகாதார அமைப்பின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் உலக சுகாதார தினம் ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகிறது.

மக்கள் தொகை பெருக்கம், சுற்றுச்சூழல் மாசு, இயற்கை பேரழிவு, இயந்திரமயம், நவீன விஞ்ஞான தொழில்நுட்ப மாற்றங்கள், பட்டினி போன்ற பல்வேறு காரணிகள் மக்களின் சுகாதாரத்துக்கும், ஆரோக்கியத்துக்கும் பெரும் சவாலாக உள்ளன.

உலக அளவில் 2040ல் 642 மில்லியன் பேர் நீரிழிவு நோயால் பாதிப்படுவார்கள் என உலக சுகாதார நிறுவனத்தின அறிக்கை ஒன்று அச்சுறுத்துகிறது. அதுமட்டுமின்றி ஒவ்வொரு நோயும் நம்மை அவற்றின் பங்குக்கு பயமுறுத்தித்தான் வைத்திருக்கின்றன. அது மட்டுமின்றி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக பல்வேறு வைரஸ்களும் உருவாகி மனிதனுக்கு பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றன.

நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க தேவையான பழக்க வழக்கங்களை நாம் கடைபிடிக்க வேண்டும். இந்த உலகத்தில் ஆரோக்கியத்துடன் வாழ நமது உடல் நலம் மிக முக்கியம். தேவையான அளவு உணவு, தேவையான அளவு உடற்பயிற்சி என்பன உடல் நலத்துக்கு முக்கியம். இதற்கு நமது உணவுப் பழக்க வழக்கங்களில் மாற்றமும் உடற்பயிற்சிக்கு நேரம் ஒதுக்கும் பண்பும் அவசியம்.

அன்றாடம் உடற்பயிற்சி செய்வதை கட்டாயமாக்கிக் கொள்ள வேண்டும். உடற்பயிற்சிக்கூடங்களுக்குச் சென்று தான் பயிற்சி செய்ய வேண்டுமென்ற அவசியம் இல்லை. வீட்டிலேயே சிறிய சிறிய உடற்பயிற்சிகள் செய்து உடலை கட்டுக்கோப்பாக வைத்துக்கொள்ளலாம்

ஆரோக்கியமான உணவை சரியான நேரத்துக்கு உட்கொள்தல், உணவில் பழங்கள், காய்கறிகளை அதிகம் சேர்த்துக் கொள்தல், உப்பு மற்றும் சீனியின் அளவை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருத்தல், சரியான இடைவெளியில் உடல் பரிசோதனைகளைச் செய்துகொண்டு அதற்கு ஏற்றார் போல் உடல்நலத்தை கவனித்துக்கொள்தல் என்பவற்றில் அக்கறை செலுத்தப்படவேண்டும்.

உடல்நலம் ஆரோக்கியமாக இருக்க வேண்டுமென்றால் மனதளவிலும் ஆரோக்கியம் தேவை. அதனால் மன அழுத்தத்தைக் குறைக்கும் பயிற்சிகளையும் அன்றாடம் செய்யலாம்

சரியான நேரத்துக்கு தூங்குதல். அதேபோல் அதிகாலை எழுதலே மனதையும் உடலையும் புத்துணர்ச்சியாக வைத்திருக்கும். உடலில் நீர்ச்சத்தை சீராக வைத்திருத்தல். சரியான நேரத்தில் தேவையான தண்ணீர் குடித்தல். கால நிலைக்கு ஏற்றவாறு பழச்சாறு குடித்தல் போன்றவை உடலில் நீர்ச்சத்து குறையாமல் பார்த்துக்கொள்ளும். புகை, மது போன்ற பழக்கங்களை அடியோடு விட்டொழித்தல், நற் பழக்க வழக்கங்களை கடைபிடிக்க வேண்டும்.

ஆரோக்கியமாக நம் வாழ்வின் முதல் லட்சியம் என்றெண்ணி உடல், மன ஆரோக்கியத்தை பேணி பலமான சமுதாயத்தை உருவாக்க நாம் இந்த உலக சுகாதார தினத்தில் உறுதி பூணுவோம்.

# ரஷ்ய - உக்ரைன் போர் விரைவில் ஒரு முடிவுக்கு வரவேண்டும்



இ.சாந்தகுமார்

உலகின் வல்லரசு நாடுகளில் ஒன்றான ரஷ்யாவில் அந்நாட்டு அதிபரைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் சமீபத்தில் நடந்து முடிந்தது. ஆறு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் ரஷ்யா அதிபர் தேர்தலில், ரஷ்யா கம்யூனிஸ்ட் கட்சி, தேசிய சுதந்திர ஜனநாயக கட்சி, புதிய மக்கள் கட்சி ஆகியவை போட்டியிட்ட நிலையில் சுயேச்சையாகப் போட்டியிட்ட தற்போதைய ரஷ்யா அதிபர் விளாதிமர்புதின் வெற்றி பெற்றுள்ளார்.



5-ஆவது முறையாக அதிபர் தேர்தலில் சுமார் 87.8 சதவீத வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றுள்ள அதிபர் புதினுக்கு ஆதரவாக சுமார் 7.6 கோடி ரஷ்யர்கள் வாக்களித்துள்ளனர். புதினுக்கு எதிராக நிறுத்தப்பட்ட கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் வெறும் 4 சதவீத வாக்குகள் மட்டுமே பெற்றிருப்பது உலக அரங்கில் பெரும் வியப்பை ஏற்படுத்தியுள்ளது.

புதினுக்கு சீனா, வடகொரியா நாடுகளின் அதிபர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர். மேலும், ரஷ்யாவுடன் நட்புடன் இருக்கும் சில மத்திய, தென் அமெரிக்க நாடுகளின் அதிபர்களும், பிரதமர்களும் புதினுக்கு தங்கள் வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளனர்.

பெரும்பாலான உலக நாடுகள் புதினுக்கு எதிராக உள்ளபோதிலும், ரஷ்ய மக்கள் தங்களையும், தங்கள் நாட்டின் இறையாண்மையையும் காப்பாற்றும் வல்லமை புதினுக்கே உண்டு என நம்புவதே தற்போதைய புதினின் அமோக வெற்றிக்குக் காரணமாகும்.

இதனிடையே, ரஷ்ய அதிபர் தேர்தல் ஜனநாயக முறைப்படி நடத்தப்படவில்லை என ஜெர்மனி கருத்து தெரிவித்துள்ளது. ரஷ்யா ஆக்கிரமித்துள்ள உக்ரைன் பகுதிகளில் ரஷ்ய அதிபரைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தலை நடத்தியிருப்பது குற்றம் என உக்ரைன் அதிபர் வொலோதிமீர் ஸெலென்ஸ்கி தனது கண்டனத்தைப் பதிவு செய்துள்ளார்.

ரஷ்ய அதிபருக்கான இத்தேர்தலில் புதின் மிகப்பெரிய வெற்றியைப் பெற்றுள்ளபோதிலும், தேர்தல் நடைபெற்ற சூழல், புதின் மீண்டும் அதிபராவதற்கு ஏற்ற வகையில் அமைக்கப்பட்டதாக உலக நாடுகள் குறிப்பாக, அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகள் குற்றஞ்சாட்டுகின்றன.

இதற்கு காரணம், உக்ரைன்- ரஷ்ய போரில் ரஷ்ய ராணுவத்துடன் இணைந்து போரிட்ட தனியார்- ராணுவ அமைப்பான வாக்னர் அமைப்பின் தலைவர் யெவ்கெனி ப்ரிகோஷின், ரஷிய ராணுவத்துக்கு எதிராக கிளர்ச்சி செய்து, பின்னர் புதினுக்கு நெருக்கமான பெலாரஸ் நாட்டு அதிபரின் முயற்சியால் புதினுடன் சமாதானமான நிலையில் திடீரென விமான விபத்தில் உயிரிழந்தார்.

சிறையில் அடைக்கப்பட்டு இருந்த ரஷ்யாவின் முக்கிய எதிர்க்கட்சித் தலைவரான அலெக்ஸி நவால்னி, தேர்தல் நடைபெறுவதற்கு ஒரு சில நாளகளுக்கு முன்னர் சிறையிலேயே உயிரிழந்தார்.ரஷ்ய அதிபர் புதின் உத்தரவின்படி சிறையில் நவால்னி கொல்லப்பட்டதாக, நவால்னியின் மனைவி வெளிப்படையாகவே குற்றஞ்சாட்டியுள்ளார். ரஷ்யாவின் பிரபலமான மனித உரிமைக்கான அமைப்பைச் சேர்ந்தவரான 70 வயதான ஒலெக் ஆர்லோவ், உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பை எதிர்த்து விமர்சனம் செய்து கருத்து வெளியிட்டமைக்காக 30 மாதம் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு தற்போது சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

ரஷ்யாவுக்கு எதிரான அமெரிக்கா தலைமையிலான நேட்டோ அமைப்பில், ரஷ்யாவின் அண்டை நாடான உக்ரைன் இணைவது தமது நாட்டின் பாதுகாப்புக்கு உகந்ததல்ல எனக் கருதும் புதின் உத்தரவின்படி அந்நாட்டின் மீது கடந்த 2022, பெப்ரவரி மாதம் முதல் ரஷ்ய ராணுவம் கடுமையாகத் தாக்குதல் நடத்தி வருகிறது.

நிலப்பரப்பு, மக்கள்தொகை, பொருளாதாரம், ராணுவம் என அனைத்து வகையிலும் ரஷ்யாவைவிட பன்மடங்கு திறன் குறைந்தது உக்ரைன். எனினும், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் ராணுவ உதவியால், ரஷ்யாவின் தாக்குதலை சமாளித்து வருகிறது உக்ரைன். ரஷ்யாவின் தாக்குதலை எதிர்த்து அமெரிக்காவும், ஐரோப்பிய ஒன்றியமும்பல கட்டங்களாக பொருளாதார தடைகளை ரஷ்யா மீது விதித்துள்ளன.

உக்ரைனுக்கு ஆதரவாக மேற்கத்திய நாடுகள் போரில் நேரடியாக ஈடுபட்டால், தமது நாடு அணு ஆயுதத்தை பயன்படுத்தத் தயங்காது என்ற புதினின் சமீபத்திய எச்சரிக்கையால் அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகள் ரஷ்யாவுக்கு எதிரான

(6ஆம் பக்கம் பார்க்க...)

# முன்னாள் பொலிஸ் அதிகாரி புத்தல பகுதியில் திடீர் கைது

## ஜப்பானிய தூதுவரின் மனைவி தங்கியிருந்த விடுதி மீது கல் லெறிந்தாராம்

புத்தல பகுதியில் ஜப்பான் தூதுவரின் மனைவி தங்கியிருந்த ஹோட்டல் ஒன்றின் மீது கற்களை வீசி தாக்குதலை மேற்கொண்ட முன்னாள் பிரதான பொலிஸ் பரிசோதகர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் குறித்து தெரியவருவதாவது –

ஜப்பான் தூதுவரின் மனைவி மரிகோ மிசுகோஷி புத்தல பகுதியிலுள்ள 'லிட்டில் ட்ரீ' என்ற விசேட தேவையுடைய குழந்தைகள் மையத்தில் நடைபெறும் வைபவமொன்றில் கலந்துகொள்வதற்காக கொழும்பிலிருந்து சென்று வியாழக்கிழமை இரவு ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்தார்.

இந்நிலையில், ஹோட்டலின் அருகில் வசித்து வந்த முன்னாள் பிரதான பொலிஸ் பரிசோதகர் ஹோட்டல் மீது கற்களை வீசி தாக்குதல் நடத்தியுள்ளார்.

இந்நிலையில், சம்பவம் குறித்து ஜப்பான் தூதுவரின் மனைவி ஹோட்டல் உரிமையாளருக்கு எழுத்துபூர்வமாகத் தெரிவித்ததையடுத்து, ஹோட்டல் நிர்வாகம் புத்தல பொலிஸில் முறைப்பாடு செய்தது.

அதில் ஜப்பான் தூதுவரின் மனைவி , ' யாரோ ஹோட்டலின் திருமண நிகழ்வுகள் நடக்கும் அறையின் பெரிய ஜன்னல் மீது கற்களை வீசினர். இதனால் ஹோட்டலுக்கு பாரிய சேதம் ஏற்பட்டது. ஹோட்டல் விருந்தினராக என்ன நடந்தது என்று நான் மிகவும் பயந்தேன். ஜப்பானிய பார்வையாளர்கள்,

ஆதரவாளர்கள் மற்றும் ஜப்பானிய அரசாங்க அதிகாரிகள் அனைவரும் 'லிட்டில் ட்ரீ' விசேட தேவையுடைய குழந்தைகள் மையத்தை பார்வையிட வந்து தங்கும் போது இதுபோன்ற ஒரு விடயம் மீண்டும் நடந்தால் அவர்கள் பயப்படுவதோடு, கவலை அடைவார்கள் எனத் தெரிவித்துள்ளார்.

குறித்த முறைப்பாட்டுக்கமைய முன்னாள் பிரதான பொலிஸ் பரிசோதகர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரை வெல்லவாய நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாக புத்தல பொலிஸார் தெரவித்துள்ளனர். (05)

# தயிர் வியாபார நிலையங்களுக்கு அக்கரைப்பற்றில் எச்சரிக்கை



(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்குட்பட்ட அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தால் அக்கரைப்பற்று பிரதான வீதிகளில் விற்கப்படும் தயிர்க்கடைகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதன் போது சுகாதாரப் பரிசோதகர்களால் தயாரிப்பு மற்றும் காலாவதியாகும் திகதிகள் பொறிக்கப்படாத மற்றும் சுவை மாற்றத்திற்கு உள்ளான தயிர்கள் கைப்பற்றப்பட்டு வியாபாரிகளுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டதுடன் எதிர்வரும் காலங்களில் கடும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அறிவுறுத்தப்பட்டது.

புனித நோன்பு காலங்களில் முஸ்லிம் மக்கள் அதிகமாக வாழும் பிரதேசங்களில் அதிகளவில் தயிர் விற்பனை இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும். (05)

# மெட்ரோ பொலிட்டன் இப்தார் நிகழ்வுகள்







(அஸ்லம் எஸ்.மௌலானா)

மெட்ரோ பொலிட்டன் கெம்பஸ் ஏற்பாடு செய்திருந்த அதன் தவிசாளரும் முன்னாள் முதல்வருமான கலாநிதி சிராஸ் மீராசாஹிப் தலைமையில் வெள்ளிக்கிழமை சாய்ந்தமருது லீ மெரிடியன் பண்டபத்தில் நடைபெற்றது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் பிரதம அதிதியாக கலந்து கொண்ட இந்நிகழ்வில் கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மி, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஐ.மன்சூர், கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் எம்.எஸ். உதுமாலெப்பை, கல்முனை மாநகர முன்னாள் பிரதி முதல்வர் ரஹ்மத் மன்சூர், கல்முனை மாநகர சபையின்

உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸீம், கணக்காளர் வை.ஹபீபுல்லாஹ் உள்ளிட்டோரும் அதிதிகளாக பங்கேற்றிருந்தனர். இதன்போது மௌலவி றியாஸ் அல்தாபி மார்க்க சொற்பொழிவாற்றினார்.

இந்நிகழ்வில் உலமாக்கள், கல்விமான்கள், அரசியல் பிரமுகர்கள், அமைப்புகளின் பிரதிநிதிகள், வர்த்தகர்கள், இளைஞர்கள் உட்பட பெரும் எண்ணிக்கையிலான பொது மக்களும் கலந்து கொண்டனர். (05)




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 990/=
Chikne Fried Rice with
Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swahpoes Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# மாணவர்களுக்கான ரமழான் செயலமர்வும் பரிசளிப்பு மற்றும் சான்றிதழ் வழங்கலும்







(எஸ்.அஷ்ரப்கான்)

கல்முனை ஹுதா ஜும்ஆ பள்ளிவாசலின் தஃவா குழு ஏற்பாடு செய்திருந்த 10 நாள்கள் கொண்ட ரமழான் செயலமர்வு தொடராக இண்டாவது வருடமாகவும் ஹுதா ஜும்ஆ பள்ளிவாசலில் இடம்பெற்றது.

இதன் இறுதி நாள் பரிசளிப்பு நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை ஜும்ஆ தொழுகையைத் தொடர்ந்து பள்ளி வாசல் நிர்வாக சபைத் தலைவர் அல்-ஹாஜ் இப்றாகீம் தலைமையில் பேஷ் இமாம் மௌலவி ஏ.எம்.சாபித் (ஸரயி, றியாதி) வழி நடாத்தலில் இடம்பெற்றது. இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக மௌலவி எஸ்.எம்.றிஷாத் ஸலீம் (றியாதி) ஷீனா கலந்து கொண்டு சிறப்பித்தார்.

70 மாணவர்கள் கலந்துகொண்டு அகீதா, பிக்ஃஹ், ஸீரா, அஹ்லாக், தஜ்வீத், பிக்ஃஹுஸ் ஸலா போன்ற பாடங்களைக' கற்று இறுதி பரீட்சையில் வெற்றியாளர்களாக தெரிவானோருக்கு, முதலாம் பரிசாக 10000 ஷரூபாவும் இரண்டாம் பரிசாக 7000 ஷரூபாவும் மூன்றாம் பரிசாக 5000 ஷரூபாவும் ஆறுதல் பரிசில்கள் 2000 ஷரூபாக்கள் வீதம் 12 மாணவர்களுக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

பங்கு கொண்ட 70 மாணவர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கிவைக் கப்பட்டதுடன், கற்பித்த கண்ணியமான உலமாக்களும் அன்பளிப்புகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (05)

# ரஷ்ய - உக்ரைன்....

(4ஆம் பக்கத் தொடர்ச்சி..)

தங்களின் நடவடிக்கைகளை சற்றே குறைத்துக் கொள்ளக்கூடும். ஏனெனில் அணு ஆயுதப் போரால் ஒட்டுமொத்த உலகத்துக்கே பேரழிவு நிச்சயம் என்பதை உலக நாடுகள் அனைத்தும் உணர்ந்தே உள்ளன.

நம் நாட்டுடன் நட்பு கொண்டிருக்கும் அயல் நாடுகளில் என்றும் நம்பிக்கைக்குரிய தோழனாக இருக்கும் நாடு ரஷ்யாவாகும். அப்போதைய ஒருங்கிணைந்த ரஷ்யா உள்ளிட்ட சோவித் யூனியன், நம் அண்டை நாடுகளான சீனா, பாகிஸ்தான் ஆகியவற்றுடன் நமக்கு போர் நிகழ்த்தும் நிர்ப்பந்தம் ஏற்பட்டபோது நமக்கு அளித்த ராணுவ ரீதியிலான உதவிகள் என்றென்றும் நினைவுகூரத்தக்கது.

ரஷ்யா மீதான பொருளாதாரத் தடையின் ஓர் அம்சமாக பிற நாடுகள் ரஷ்யாவிடமிருந்து கச்சா எண்ணெய் வாங்கக் கூடாதென்ற அமெரிக்கா வின் எச்சரிக்கையையும் பொருட்படுத்தாது, நம் நாடு ரஷ்யாவிடம் கச்சா எண்ணெய் வாங்கியது குறிபபிடத்தக்கது. ரஷியாவுடனான இந்தியாவின் ஆழமான நட்புறவுக்கு இது ஒரு சான்றாகும். இத்தகு நெருங்கிய நமது நட்பு நாடான ரஷ்யா, தனது அண்டை நாட்டுடன் நீண்டகால போரில் ஈடுப்பட்டுள்ளது வேதனையளிக்கிறது. விரைவில் இப்போர் பேச்சு மூலம் முடிவுக்கு வரவேண்டும். உலகின் கோதுமை உற்பத்தியில் 29 சதவீதம் ரஷ்யா, உக்ரைன் நாடுகளின் வசம் உள்ளது. இரண்டு ஆண்டுகளைக் கடந்து தொடரும் ரஷ்யா- உக்ரைன் போரால் பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு ஆகியன உலகின் பிற நாடுகளுக்கு போதுமான அளவு கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இரு நாடுகளில் கல்வி பயிலும் பிற நாட்டு மாணவர்களும் போரால் பாதிக்கப்பட்டு உள்ளனர். போரின் விளைவாக ஏற்படும் இழப்புகளால் ரஷ்யா, உக்ரைன் மட்டுமின்றி உலகின் பிற நாடுகளும் பாதிக்கப்படுகின்றன. தமது நாட்டின் மக்களையும், இறையாண்மையையும் காக்க உறுதிபூண்டுள்ள புதினுக்கு, மனிதநேய அடிப்படையில் உலக மக்களின் நலனைக் காக்கும் கடமையும் உண்டு. உலகில் ஆங்காங்கே போர்ச் சூழல் நிலவிவரும் இக்காலகட்டத்தில் போரில்லா புது உலகை உருவாக்க வேண்டியக் கடமை அனைத்து நாட்டு தலைவர்களுக்கும் உண்டு. அதற்கேற்ப புதினின் எதிர்கால அரசியல் அணுகுமுறை அமையும் என நம்புவோம்.



## 2048இல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாநாட்டில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கஇதனைக்குறிப்பிட்டார்.

கூம்பிச்சாங்குளம் அருகில் இடம்பெற்ற இந்த மாநாட்டில் அனுராதபுரம்மாவட்டத்தைச்சேர்ந்த பெருமளவானஇளைஞர்கள்கலந்து கொண்டுதமது பிரச்சினைகள் பலவற்றை ஜனாதிபதியிடம் முன்வைத்தனர்.

அவற்றில்பலபிரச்சினைகளுக்கு அந்த இடத்திலேயே தீர்வுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்த ஜனாதிபதி, ஏனைய பிரச்சினைகளைத்தீர்ப்பதற்குநடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினார்.

இங்கு எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளித்த ஜனாதிபதி, பரீட்சை திணைக்களத்தின் சான்றிதழுக்கு வாழ்க்கை தோல்வியடைய அனுமதிக்கப்போவதில்லை என்றும், கட்டியெழுப்பப்படும்இலங்கையில்எதிர்காலத்தில் இளைஞர் யுவதிகளுக்கு பல தொழில் வாய்ப்புகளை உருவாக்க எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

அதேபோன்று எதிர்காலத்தில் கல்விப்பொது சாதாரண தர சான்றிதழ்காரணமாகபதின்மூன்று வருடகல்வி நிறுத்தப்படாது எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் சீர்திருத்த வேலைத்திட்டம் குறித்து இளைஞர்களுக்கு தெளிவுபடுத்திய ஜனாதிபதி, சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை சட்டப்பூர்வமாக்கி நாட்டிற்கு நிவாரணம் வழங்குவதுடன், பொருளாதாரமறுசீரமைப்புசட்டமும் இந்தமேமாதம்முன்வைக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

அத்துடன், இலங்கையின் வெளிநாட்டுக் கடனைத் திருப்பிச் செலுத்தும் காலத்தை 2042ஆம் ஆண்டு வரை நீடிக்கவும், அந்தக் கடன்களில் ஒரு பகுதியை நீக்கிக்கொள்ள எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்த ஜனாதிபதி, நாட்டை முன்னேற்றுவதற்கு ஏற்றுமதிப் பொருளாதாரத்தைவிரைவாகநிறுவ வேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டினார்.

நவீன தொழில்நுட்பத்துடன் நாட்டின்இளைஞர்களை வலுவூட்டி நாட்டின் பொருளாதாரத்திற்கு நேரடியாக பங்களிக்கும் வேலைத்திட்டம் அரசாங்கத்திடம் உள்ளதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

## ஜனாதிபதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரும் நாட்களில் பேச்சு நடத்தப்படும்.

ஜனாதிபதி வேட்பாளர்கள் யார் என்பது உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டதன் பின்னரேயே எமது நிலைப்பாட்டை வெளிப்படுத்துவோம் என்றார்

## புத்தரிசி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பித்ததுடன்,மகாசங்கத்தினரின் பிரித் பாராயணத்துக்கு மத்தியில் தங்கப் பாத்திரத்தில் அரிசியை நிரப்பும் நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும்கலந்துகொண்டார்.

தேசிய புத்தரிசி விழாவின் நினைவுப் பதிப்பும் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது. அநுராதபுரம் மாவட்ட விவசாய அமைப்பின் தலைவர் புஞ்சிரால விவசாயி ஜனாதிபதிரணில்விக்ரமசிங்கவிடம் விவசாயப் பிரேரணையை முன்வைத்தார். ஆதிவாசித்தலைவர் வன்னில எத்தோ ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு தேன் வழங்கினார்.

அடமஸ்தானாதிபதி கண்டி களவிய பிரதம சங்கநாயக பூஜ்ய பல்லேகம ஹேமரதன நாயக்க தேரர் இங்கு விசேட அனுசாசனை உரை நிகழ்த்தியத்துடன், விவசாய மற்றும்பெருந்தோட்டகைத்தொழில் அமைச்சர் மகிந்த அமரவீரவும்



காலைக்கதிர் Kalaikkathir

# ஓட்டோ மீது மரம் விழுந்து விபத்து

## அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பிய பயணிகள்

நானுஓயா பொலிஸ் பிரிவுக்குப்பட்ட கிளாசோ தோட்டத்திற்கு செல்லும் வீதியில் வெள்ளிக்கிழமை ஓட்டோ ஒன்றின் மீது மரம் விழுந்ததில் சிறுவன் ஒருவன் காயங்களுடன் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக பாலிஸார் தெரிவித்தனர்.

நானுஓயா கிளாசோ பகுதியில் இருந்து நானுஓயா நகரை நோக்கி பயணித்து கொண்டிருந்த முச்சக்கர வண்டி ஒன்றின் மீது வீதியோரத்தில் உள்ள காட்டுப் பகுதியில் மரம் ஒன்றினை சட்ட விரோதமாக வெட்டிக் கொண்டிருந்த வேளையில் திடீரென மரம் வீதியில் சென்றுக் கொண்டிருந்த ஓட்டோமீது வீழ்ந்தமையால் குறித்த விபத்துச் சம்பவம் நேர்ந்துள்ளது.

எனினும் குறித்த மரத்தை வெட்டியது யார் என்று தெரியாத நிலையில் சம்பவம் தொடர்பாக நானுஓயா பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

மேற்படி விபத்தால் சற்று நேரம் இந்த வீதியூடான போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது மேலும் ஓட்டோவும் முழுமையாக சேதமடைந்துள்ளது.(05)

# வெல்லவாய நீதிமன்றத்தில் வழக்குபொருள்கள் திருடு

## அலுவலக உதவியாளர் கைது

வெல்லவாய நீதிமன்ற வளாகத்தில் உள்ள வழக்கு பொருள்களை வைக்கும் அறையிலிருந்து 171 கிலோ 285 கிராம் கஞ்சா மற்றும் துப்பாக்கி உள்ளிட்ட பொருள்களை திருடியதாக கூறப்படும் வெல்லவாய நீதிமன்ற அலுவலக உதவியாளர் ஒருவர் வெல்லவாய பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இவ்வாறு கைது செய்யப்பட்டவர் கொஸ்லந்த 43 வயதுடைய நபராவார்.

திருடப்பட்ட கஞ்சா தொகையின் மதிப்பு ஒரு கோடியே இரண்டு லட்சம் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், சந்தேக நபரால் திருடப்பட்டதாகக் கூறப்படும் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி ஒன்றும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டு நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (05)

# மன்னாரில் கடல் அட்டைகளை கடத்திச் சென்ற 5 பேர் கைது





மன்னார் - நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள அச்சங்குளம் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போது சட்ட விரோதமான முறையில் பிடிக்கப்பட்டு, பொதி செய்யப்பட்ட கடல் அட்டைகளை இடமாற்றம் செய்த 05 பேரை கடற்படையினர் வியாழக்கிழமை கைது செய்துள்ளனர்.

மேலும், 589 கடல் அட்டைகள், 03 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் டைவிங் கியர்களையும் கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

மீன்பிடி நடைமுறைகளைப் பொருப்படுத்தாமல் மக்கள் சட்டவிரோதமாக மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுவதை தடுக்க கடற்படை தீவின் கரையோர மற்றும் கடற்பரப்புகளில் வழக்கமாகத் தேடுதலை மேற்கொள்கிறது.

இந்த முயற்சிகளின் தொடர்ச்சியாக வடமத்திய கடற்படை கட்டளைக்குப்பட்ட புஸ்ஸதேவ கடற்படைப் பிரிவின் அச்சங்குளம் முகாம் கடற்படை வீரர்கள் அச்சங்குளத்தில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவ்வேளை, சந்தேகத்தின் பேரில் 03 மோட்டார் சைக்கிள்களை சோதனையிட்டதில் 589 கடல் அட்டைகள் பிளாஸ்டிக் கொள்கலன்களில் அடைத்து கடத்தப்பட்டுள்ளது.

சந்தேக நபர்கள் மன்னார் பகுதியைச் சேர்ந்த 23 முதல் 60 வயதுக்கு உட்பட்டவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் 05 பேரும் கடல் அட்டைகள், டைவிங் கியர் மற்றும் 03 மோட்டார் சைக்கிள்களுடன் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக முருங்கன் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது. (05)

# வீதியோர உணவகங்களில் சாய்ந்தமருதில் சோதனை





(அஸ்ஹர் இப்றாஹிம்)

புனித ரமழான் நோன்பு ,தமிழ் சிங்கள புது வருடம் ஆகியவற்றையொட்டி சாய்ந்தமருது பிரதான வீதி மற்றும் உள்ளூர் பிரதேசங்களில் விற்பனை செய்யப்படும் உணவகங்களில் திடீர் சுற்றி வளைப்பு இடம்பெற்று வருகின்றது.

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தால் உணவகங்கள் மற்றும் கடைத் தொகுதிகளில் விசேட சுற்றி வளைப்புக்கள் இடம்பெற்று பாவனைக்கு உதவாத பொருள்கள் அழிக்கப்படுவதுடன் விற்பனைக்கு எதிராக செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் அர்ஷத் காரியப்பர் தலைமையில் இந்த சுற்றி வளைப்புகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. (05)

# பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயத்தால் மாணவன் சந்தோஸ் பாராட்டி கௌரவிப்பு



(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்லடியில் அமைந்துள்ள 38 ஆம் படைப்பிரிவு பொலிஸ் கடேற் படையணியினர் ஒழுங்கு செய்திருந்த பாடசாலை மாணவர் கடேற் படையணி தரப்படுத்தல் நிகழ்வில் பட்டிருப்பு தேசிய பாடசாலை உயர்தர மாணவன் ரீ.சந்தோஸ், மாணவர் படையணியின் மேஜர் எனும் தரத்திற்கு இரட்டைப் பதவி உயர்வு பெற்று பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

ரீ.சந்தோஸ் பாடசாலையில் தரம் ஆறு தொடக்கம் கடேற் படையணியில் இணைந்து செயற்பட்டதுடன் பயிற்றுவிப்பாளர்கள் முகுந்தனின் பயிற்சியுடன் கடந்த இரண்டு வருடங்களாகச் செயற்பட்டு வந்தார். (05)

# இன நல்லிணக்க இப்தார் நிகழ்வு சம்மாந்துறையில்



( வி.ரி.சகாதேவராஜா)

சம்மாந்துறை வலயக்கல்விப் பணிமனையின் வருடாந்த இப்தார் நோன்பு திறக்கும் இனநல்லிணக்க இப்தார் நிகழ்வு பணிமனை வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது.

வலயக்கல்விப் பணிப்பாளர் டாக்டர் உமர் மௌலானா தலைமையில் நடைபெற்றது.

கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் ஏ.நசீர், கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் (நிதி) ஏ.எம்.றபீக், சம்மாந்துறை பிரதேச செயலாளர் எம் எச் எம். ஹனிபா உள்ளிட்ட பல்வேறு முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர். (05)

# வலையில் சிக்கிய 11 டொல்பின்களும் யாழில் மீண்டும் கடலில் விடப்பட்டன

## மீனவர்களுக்குப் பாராட்டு

யாழ்வடமராட்சிகிழக்கு கட்டைக்காட்டில் வெள ்ளிக்கிழமை கரைவலையில் அகப்பட்ட 11 டொல்பின்களும் மீண்டும் கடலில் விடப்பட்டன.

கட்டைக்காடு பகுதியைச் சேர்ந்த அருமைத்துரை சம்மாட்டியின் கரைவலையில் வெள்ளிக்கிழமை காலை 11 டொல்பின்கள் அகப்பட்டன.

குறித்த டொல்பின்கள் வலைக்குள் அகப்பட்டதை அறிந்த மீனவர்கள் பத்திரமாக 11 டொல்பின்களையும் உயிருடன் மீட்டு மீண்டும் கடலுக்குள் பாதுகாப்பாக விட்டனர்.

டொல்பின்களை உயிருடன் கடலுக்குள் அனுப்பி வைத்த மீனவர்களுக்கு பலரும் பாராட்டுக்களைத் தெரிவித்து வருகின்றனர .(05)





காலைக்கதிர்
Kalaikkathir

# உலக கண்ணிவெடி தினம் ஏப்ரல் 4 கிளிநொச்சியில் விசேட நிகழ்வுகள்





கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்குப்பட்ட கிளி/மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று (சனிக்கிழமை) காலை 10 மணியளவில் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள மனிதாபி மான கண்ணிவெடி அகற்றும் நிறுவனங்களின் ஏற்பாட்டில் உலக கண்ணிவெடி தினம் நிகழ்வு நடத்தப்பட்டது.

மேற்படி நிகழ்வில் வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிசன்ன ரணதுாங்க மற்றும் கடல் தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் ஆளுநர் திருமதி சார்ள்ஸ், மாவட்ட உதவிச் செயலர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் ,மனிதாபிமான கண்ணிவெடிப் பிரிவின் உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் காட்சிப்படுத்தியிருந்த வெடிகுண்டுகளையும் பாதுகாப்பு கவசங்களையும் அமைச்சர்கள் பார்வையிட்டதோடு கண்ணிவெடி அகற்றும் செயன்முறையும் அங்கே காண்பிக்கப்பட்டது. (05 - 113)

## யாழில். ஒலிபெருக்கிச் சாதனத்துக்குள் மறைத்து கஞ்சா கடத்திய மூவர் கைது




யாழ்ப்பாணத்தில், சிறிய ரக ஒலிபெருக்கி சாதனத்தினுள் கஞ்சாவை மறைத்து கடத்தி சென்ற குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் , அவர்களிடம் இருந்து 18 கிலோ கஞ்சா போதைப்பொருளையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

சாவகச்சேரி பகுதியில் கடந்த 30 ஆம் திகதி 04 கிலோ கஞ்சா போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்ட இருவரை பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தி , 07 நாள்கள் பொலிஸ் தடுப்புக்காவலில் வைத்து விசாரணை செய்வதற்கு அனுமதி கோரி இருந்தனர். அதற்கு நீதிமன்று அனுமதி வழங்கி இருந்தது.

அவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் , அவர்களிடம் இருந்து இரகசிய தகவல்களை பெற்று , பொலிஸ் புலனாய்வு பிரிவினர் சிறப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

இந்நிலையில் நேற்று (சனிக்கிழமை) மோட்டார் சைக்கிள் ஒன்றில் கஞ்சா கடத்தி செல்லப்படுவதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் செம்மணி பகுதியில் விசேட சோதனை நடவடிக்கையை முன்னெடுத்த போது , சந்தேகத்திற்கு இடமான முறையில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர்களை பொலிஸார் மறித்து சோதனையிட்டனர்.

அதன் போது , சிறிய ரக ஒலிபெருக்கி சாதனம் ஒன்றினுள் கஞ்சா போதைப்பொருளை மறைத்து எடுத்து செல்வது பொலிஸாரால் கண்டறியப்பட்டது. அதனை சோதனையிட்ட போது மறைத்து வைக்கப்பட்டிருந்த கஞ்சாவை மீட்டனர்.

அதேவேளை அவர்களின் உடைமையில் இருந்தும் ஒரு தொகை கஞ்சாவை மீட்டனர்.

அதனை அடுத்து மூவரையும் கைது செய்த பொலிஸார் அவர்களிடம் மேற்கொண்ட ஆரம்ப கட்ட விசாரணையில் மூவரும் மன்னார் பகுதியை சேர்ந்தவர்கள் எனத் தெரிவித்துள்னர். கைது செய்யப்பட்ட மூவரையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.(05)

## கிளிநொச்சியில் 18 கிலோ கஞ்சாவுடன் ஒருவர் கைது

கிளிநொச்சியில் 18 கிலோ கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மன்னாரில் உள்ள போதை ஒழிப்பு விசேட பிரிவினருக்கு கிடைத்த தகவலிற்கு அமைவாக குறித்த பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பில் இந்தக் கைது இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவிற்குப்பட்ட பொன்னகர் பகுதியில் வைத்தே சோதனை மேற்கொண்ட போது 18 கிலோ 470 கிராம் கஞ்சா குறித்த சந்தேக நபரிடம் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

நள்ளிரவு கைது செய்யப்பட்ட சந்தேக நபரும், சான்று பொருள்களும் கிளிநொச்சி பொலிஸ் காவலில் உள்ள நிலையில் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (05)

## கிளிநொச்சியில் நனோ நீர் சுத்திகரிப்பு மையம் திறந்து வைத்த அமைச்சர் பிரசன்ன ரணதுங்க




கிளிநொச்சி மாவட்டத்தில் இருவேறு இடங்களான செல்வாநகர் மற்றும் உருத்திரபுரம் பகுதியில் சுத்தமான குடிநீர் வழங்கும் திட்டத்தை ஆரம்பித்து வைத்த வீடமைப்பு நகர அபிவிருத்தி அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவால் மக்களின் பாவனைக்காக வழங்கி வைக்கப்பட்டது.

மேற்படி நிகழ்வில் வீடமைப்பு நகரபிவிருத்தி அமைச்சர் பிரசன்ன ரணதூங்க மற்றும் கடல்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் கிளிநொச்சி மாவட்ட உதவி அரசாங்க அதிபர் மற்றும் அமைப்பாளர்கள் மற்றும் மாணவர்கள், ஆசிரியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

நவடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் ஏற்பட்ட யுத்த நிலை காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் மீள்குடியமர்த்தப்பட்ட கிராமங்களில் நனோ நீர்சுத்திகரிப்பு நிலையங்களை நிர்மானிக்கும் அரசாங்க வேலைதிட்டத்தின் கீழ் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் தேசிய சமூக நீர்வழங்கல் திணைக்களத்தினால் கிளிநொச்சி கரைச்சி உருத்திரபுரம் வடக்கு நீர் வழங்கல் சமூக அடிப்படை நிலையத்தில் நிர்மானிக்கப்பட்டுள்ள நனோ நீர் சுத்திகரிப்பு மையம் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

(05 - 113)

## மாதுளை சேகரிப்பு மற்றும் பதப்படுத்தும் நிலையம் கிழக்கு ஆளுநரால் ஏறாவூர்பற்றில் திறந்து வைப்பு





(நூருல் ஹுதா உமர்)

விவசாயிகள் மத்தியில் பழச் செய்கையை ஊக்குவிக்கும் நோக்கில் மாதுளை சேகரிப்பு மற்றும் பதப்படுத்தும் நிலையத்தை ஏறாவூர் பற்று பிரதேசத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் திறந்து வைத்தார்.

விவசாயிகளின் விளைச்சலை அதிகரிப்பதற்காக விவசாயச் சங்கங்களுக்கு விவசாய உபகரணங்களையும், மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகளுக்கும் உபகரணங்களையும் ஆளுநர் வழங்கி வைத்தார். இந்நிகழ்வில் வர்த்தக இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன், கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கலாநிதி எம். கோபாலரத்தினம், கிழக்கு மாகாண விவசாய பணிப்பாளர் உட்பட அரச அதிகாரிகள் கலந்து கொண்டார். (05)

# கிழக்கு மாகாண பிரதி ஆணையராக வைத்தியர் எம்.ஏ.நபீல் நியமனம்

(அபு அலா)

கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள பிரதி மாகாண ஆணையாளராக அக்கரைப்பற்றைச் சேர்ந்த வைத்தியர் எம்.ஏ.நபீல் பதவியுர்வு பெற்றுள்ளார். அவருக்கான நியமனக் கடிதத்தை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் நேற்று (சனிக்கிழமை) திருகோணமலையில் வழங்கி வைத்தார்.

கொழும்பு சுதேச மருத்துவபீடத்தில் மருத்துவக் கல்வியை முடித்து யுனானி வைத்தியராக 2001.10.15 ஆம் திகதி பட்டம்பெற்ற அதேவேளை, களனி பல்கலைக்கழகத்திலும் இணைந்து கொண்டு சுதேச வைத்தியத்துறையிலும் பட்டம் பெற்ற இவர், வைத்தியராக நியமனம் பெற்று கிழக்கு மாகாண அம்பாறை மாவட்ட வேரான்கட்டுக்கொட, சம்மாந்துறை, அட்டாளைச்சேனை, நிந்தவூர் போன்ற ஆயுர்வேத வைத்தியசாலைகளில் வைத்திய பொறுப்பதிகாரியாகவும், வைத்திய அத்தியச்சகராகவும் பணி செய்து, கல்முனை பிராந்திய ஆயுள்வேத இணைப்பாளராகவும் பணியாற்றி வந்தார்.

இந்நிலையில், கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்கள பிரதி மாகாண ஆணையாளர் வெற்றிடத்திற்கான இடைவெளியை பூர்த்தி செய்யும் நோக்கில், கிழக்கு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழு செயலகத்தால் நடத்தப்பட்ட கிழக்கு மாகாண வைத்தியர்களுக்கான நேர்முக தேர்வில் அதிக புள்ளிகளைப்பெற்று கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்கள பிரதி மாகாண ஆணையாளராக தெரிவு செய்யப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (05)

# ரமழானை மாதத்தை முன்னிட்டு தேவையுடையோருக்கு உதவி

(நூருல் ஹுதா உமர்)

முஸ்லிம்கள் சார்பில் மிகப் பிரபல்யம் மிக்க இயக்கங்களில் ஒன்றான அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் ஏற்பாட்டில் தேவையுடைய மக்களுக்கு பல்வேறு உதவிகளை செய்துவரும் 'அல்மா' நிதியத்தின் உதவியுடன் ரமழானை முன்னிட்டு தேவையுடைய மக்களை அடையாளம்கண்டு உலர் உணவுப்பொருள்கள் வழங்கிவைக்கும் நிகழ்வு சாய்ந்தமருது இளைஞர் வள நிலையத்தில் நேற்று (சனிக்கிழமை) அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் அம்பாறை மாவட்ட பணிப்பாளர் எம்.ஐ.எம். றியாஸ் (அதிபர்) தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வின் போது அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் பிரதிதேசிய தலைவர்களான எஸ்.தஸ்தகீர், எம்.ஐ. உதுமலெவ்வை மற்றும் முன்னாள் திட்ட தவிசாளர் கே.எல். சுபைர் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

இவர்களுடன் அக்கரைப்பற்று, பாலமுனை, சவளக்கடை, கல்முனை, சாய்ந்தமருது, மாளிகைக்காடு மற்றும் மாவடிப்பள்ளி பிரதேச தலைவர்களும் கலந்து கொண்டனர்.

ரமழானை முன்னிட்டு தேவையுடைய மக்களை அடையாளம் கண்டு 'அல்மா' நிதியத்தின் உதவியுடன் சுமார் 4500 ஷரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கும் ஆரம்ப நிகழ்வின்போது வை.எம்.எம்.ஏ. இன் பல்வேறுமட்ட உறுப்பினர்களும் உதவிகளை பெற்றோரும் கலந்து கொண்டனர்.(05)

# கல்முனை முஹம்மதிய்யா இஸ்லாமிய நூலகத்தின் ரமழான் மாத பரிசளிப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

ரமழான் மாத பாடசாலை விடுமுறையை மாணவர்கள் பயனுள்ள முறையில் கழிக்க வேண்டும் என்ற நோக்கில் கல்முனை முஹம்மதிய்யா இஸ்லாமிய நூலகத்தால் வருடாவருடம் நடத்தப்படுகின்ற மாணவர்களுக்கான தர்பிய்யா நிகழ்ச்சி வழமை போன்று இவ்வருடமும் 19 ஆவது முறையாக சிறப்பாக நடைபெற்றது.

இத் தர்பிய்யா நிகழ்ச்சியில் அகீதா, பிக்ஹ், ஹதீஸ் மற்றும் துஆ மனனம் ஆகிய வகுப்புகள் நடைபெற்றதுடன், தொழுகை முறைகள் செய்முறை மூலமாகவும் பயிற்றுவிக்கப்பட்டன.

கலந்து கொண்ட மாணவர்களுக்கு சான்றிதழும் பரிசிலும் வழங்கப்பட்டன. (05)




# சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து மன்னாரில் ஒருநாள் செயலமர்வு

மன்னார் மாவட்டத்தில் அரச திணைக்களம் மற்றும் தனியார் அமைப்புகளில் கடமையாற்றும் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளை உள்ளடக்கி மாவட்ட சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான செயலமர்வு மன்னார் மெசிடோ நிறுவனத்தின் ஏற்பாட்டில் வெள்ளிக்கிழமை காலை முதல் மாலை வரை மன்னாரில் இடம்பெற்றது.

மன்னார் மெசிடோ நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தலைமையில் இடம்பெற்ற குறித்த செயலமர்வில் சுற்றுச்சூழல் தொடர்பாகவும் குறிப்பாக மாவட்டத்தில் உள்ள பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் விளக்கமளிக்கப்பட்டது.

குறிப்பாக மன்னாரில் கழிவகற்றல் நடவடிக்கைகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ள நிலையில் மன்னார் நகரில் ஏற்பட்டுள்ள சுகாதார பாதிப்புகள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் உள்ள பிரச்சினைகளை எதிர் காலத்தில் எவ்வாறு மாற்றியமைக்க முடியும் என்பது குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது.

குறிப்பாக மன்னாரில் முன்னெடுக்கப்பட்டு வரும் காற்றாலை மின் உற்பத்தியின் சாதக பாதக நிலை,கணிய மணல் அகழ்வால் ஏற்பட்டுள்ள சவால்கள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

இந்தச் செயலமர்வில் கொழும்பில் உள்ள எஸ்.ஐ.பி.எல் நிறுவனத்தின் முகாமையாளர் மற்றும் குறித்த நிறுவனத்தின் சுற்றுச்சூழல் பிரதி நிதி ஆகியோர் கலந்துகொண்டு விளக்கமளித்தனர் என்பது குறிப் பிடத்தக்கது. (05)

# காணி அனுமதிப்பத்திரம் மூதூரில் வழங்கிவைப்பு



(மூதூர் நிருபர்)

மூதூர் பிரதேச செயலாளர் பகுதியில் அரச காணிகளில் வதியும் பயிர்ச்செய்கை நடவடிக்கை மேற்கொள்ளும் 270, பேருக்கு காணி ஆவணம் வழங்கும் நிகழ்வு மூதூர் பிரதேச செயலாளர் எம்.பீ.எம்.முபாறக் தலைமையில் வெள்ளிக்கிழமை மூதூர் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம்.அதாவுல்லா ஆகியோர் கலந்துகொண்டு காணி ஆவணங்களை மக்களிடம் வழங்கிவைத்தனர். (05)

# உணவகத்திற்கு சாப்பிட சென்றவர் மீது தாக்குதல்

மன்னார் மாந்தை மேற்கு மூன்றாம்பிட்டி கிராமத்தில் வசிக்கும் நபர் ஒருவர் யாழ் ஏ32 வீதி நாச்சிகுடா சந்தியில் இருக்கும் உணவகம் ஒன்றிற்கு வியாழக்கிழமை சாப்பிடுவதற்க்காக சென்று உணவு உண்ணும் போது உணவில் ஈ இருப்பதை அவதானித்தவர் உணவு பரிமாறுபரிடம் ஈ கிடப்பதாக கூறியுள்ளார்.

அதற்கு அவர் உடனே சிங்களத்தில் கதைத்துள்ளார். அதற்கு உணவு உண்ண சென்றவர் ஏன் சிங்களத்தில் கதைக்கின்றீர்கள் தமிழ்தானே நீங்கள் தமிழில் கதையுங்கள் என்று கூறி போது

உணவகத்தில் நின்ற பணியாளர்கள் இணைந்து முரண்பட்டு குறித்த நபரை எச்சரித்து மிரட்டல் விட்டதுடன் அதில் ஒருவர் தாக்கியுள்ளார் அதனைத் தொடர்ந்து உணவக உரிமையாளரிடம் நபர் கூறிய போது இது சகஜம். இதனை போலீஸில் முறையிட வேண்டாம் என கூறியுள்ளார்.

நபர் தனக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்தபடியாலும் தாக்கப்பட்டதாலும் முழங்காவில் பொலீஸில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார் .

ஆனால் பொலீஸார் இது வரையும் எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை உணவகத்தில் கணகாணிப்பு கமரா பொருத்தப்பட்டுள்ளது. அதனை பொலீஸார் பரிசோதிக்கலாம் என்று தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்ட நபர் தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(05)



காலைக்கதிர் Kalaikkathir




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.04.2024இல் வெளியிடப்பெற்றது